

## உலகில் அமைதியும் சந்தோஷமும்.....

## Dr.மரியா மாண்டிசொரி அம்மையாரின் கல்விக் கோட்பாடுகள் - Uni5 system மூலம் அறியப்படும் செய்திகள். [கல்வியின் குறிக்கோள் என்ன?]

இன்றைய உலகில் அமைதியும் மகிழ்ச்சியும் இல்லாமல் போய்க்கொண்டு இருக்கின்றது. அரசியல் மூலம் இதற்குத் தீர்வு காண்பது மிகவும் கடினம். காரணம் வன்முறைக்கு அரசியல் மூலம் நிறந்தர முற்றுப் புள்ளி வைக்க முடிவதில்லை.

அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் மாறி வரும் இக்கால வாழ்க்கையில் மனிதனுள் உள்ள நியதிகள் மாறுகின்றன, சமூகக் கட்டமைப்பும் மாறுகின்றது.

பெரும்பாலும் நாம் குழந்தைகளை சமூகப் பொறுப்புணர்வுடன் வளர்த்து ஆளாக்குவதில்லை. போட்டியும் தன் தேவைகளைத் தீர்த்துக் கொள்ளும் அவசரமும் அதற்காக எதையும் செய்யும் மனப்பான்மையும் எதையும் உடனுக்குடன் பொறுமையே இல்லாமல் அடைய முற்படும் அவரச புத்தியும் வர வர மனிதர்களுக்குள் நம் கல்வி வளர்த்து வருகின்றது.

சமூகக் கட்டமைப்பையும் வாழ்க்கையின் பொறுப்புகளையும் மனித குலத்தின் முழுமையான தேவைகளையும் புரிந்து கொண்டு அனைவரும் ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்த சிந்தனையுடன் வாழும் வகையில் பள்ளிகளில் பயிற்சிகள் மிகச் சிறிய வயது முதலே தரப்பட வேண்டும்.

என்ன தான் விஞ்ஞானத்தின் வேகத்தில் மனிதனின் அறிவியல்தொழில்நுட்ப வளர்ச்சி அமோகமாய் இருந்தாலும் இன்னும் மனிதன் தன்னை உணர்ந்து வாழ்க்கையின் அமைதியையும் உண்மையான மகிழ்ச்சியையும் தேடிப் புரிந்து கொள்ள முதியவில்லை. இதற்குக் கல்விக்கூடங்கள் ஒத்துழைப்பதில்லை.வெறும் அறிவியல் மூலம் மனிதனின் தேவைகள் தான் பூர்த்தியாகுமே ஒழிய வாழ்க்கை முழுமை பெறாது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மனித சமுதாயத்தில் கட்டமைப்பு குலைந்து வருகின்றது. தனிமனித சந்தோஷம் தான் முக்கியம் என்ற நிலை ஏற்பட்டு வருகின்றது. அதைப் பெற குடும்பம் முதல் உலகம் வரை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணம் ஓங்கி வளர்கிறது. இதைக் கல்விக்கூடங்களும் கவனிக்க வேண்டும்!

லௌகீக வாழ்வில் பொருள் சேர்ப்பது மட்டுமே முக்கியம் என்ற எண்ணத்துடன் மக்களின் வாழ்க்கை நிகழ்கின்றது. பொருளாதார சுகமும் தேவைகளும் இரும்பை இழுக்கும் காந்தமாக இருப்பதைக் காண்கிறோம். பொருள் சுகம் என்ற வலைக்குள் மக்கள் அகப்பட்டு விடுவது பரிதாபமாக உள்ளது.[இதைத் தானே காலங்காலமாக பாரததேசத்தின் சான்றோர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்?]

மனிதர்கள் தொழில்நுட்பத்தால் ஒன்று படுகின்றனர், ஆனால் மனதளவில் பிரிந்து தனித்தனித் தீவுகளாய் வாழ்கின்றதையும் பார்க்கின்றோம்.

குடும்பங்களுக்குள் உறவுகளுக்குள் உள்ள எல்லைக்கோடுகள் வலுக்கின்றன. இவை ஒழிந்து உலக சமூகம் மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டும். [வள்ளலாரின் சன்மார்க்க நெறியும் இதையே வலியுறுத்தும்]

அறிவியல் வளர்ச்சியின் மூலம் எப்படி மனித சமூகத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளதோ அதே வேகத்தில் மனித சமூகத்தின் பொறுப்புணர்வும் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் அமைதியும் கட்டுப்பாடுகளும் மீண்டும் மீட்டுருவாக்கம் செய்யும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டு இருப்பதை உணர வேண்டும்.

அத்தகைய மாற்றங்களைக் கொண்டு வருவதே கல்வியின் மிக முக்கிய குறிக்கோள் ஆகும்.

மனித சமூகத்தின் கட்டமைப்பை மீண்டும் நாம் மீட்டுருவாக்கம் செய்வது மிகவும் அவசியம் ஆகிறது.